



சென்னை வடக்கு, வடகிழக்கு , கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம் வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் – சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் தியாகராயர்நகர் ஓட்டல் அகார்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் – ஆ.இராசா எம்.பி. ஆலோசனை வழங்கி சிறப் புரையாற்றினார். இதில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, ஆவடி சா.மு.நாசர், மாவட்டச் செயலாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# காஞ்சிபுரத்தில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்– ஆர்.காந்தி பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப். 3 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (03.09.2025-புதன்கிழமை) மாலை 6 மணிக்கு தேரடி தெரு, கங்கைகொண்டான் மண்டபம் அருகில், காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் வரவேற்றுப் பேசுகிறார்.

மாநகர அவைத் தலைவர் கே.ஏ.செங்குட்டுவன், மாநகர துணைச் செயலாளர்கள் ஏ.எஸ்.முத்துச்செல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, மாநகர பொருளாளர் கு.சுப்புராயன், பகுதிச் செயலாளர்கள் எஸ்.சந்துரு, அ.தசரதன், ச.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்

மேலும் இக் கூட்டத்தில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஆர்.காந்தி ஆகியோர் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், ஜெ.ராமகிருஷ்ணன், எம்.எஸ்.சுகுமார், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், பெ.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், ப.அப்துல்மாலிக், அ.யுவராஜ், நாத்திகம் நாகராசன், கே.ஏ.இளங்கோவன், வ.மலர்மன்னன், டி.ஜெய்கணேஷ், ஏ.செல்வி, டி.வெங்கட்ராமன், சி. ராதாகிருஷ்ணன், எ.சசிக்குமார், இ.எல்.கண்ணன், எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ப.சுரேஷ், பி.சங்கர், ஜெ.வரதாஜன், எஸ்.சேகர், அ.பாலமுருகன், சசிகலா கணேஷ், எஸ்.கே.பி.சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ்.மோகன், ஆ.சதீஷ் என்கிற சரவணன், எம்.தேவராஜ், சி.எம்.பிரபு, எம்.வி.இளம்பரிதி, எஸ்.அரவிந்த்குமார், ஜெ.தேவிகா, ரா.விஜய லட்சுமி, பி.விஜயா, ஆர்.கே. தம்பி துரை, எஸ்.துரைமுருகன், ஏ.அர்ஜுன், சாட்சி சண்முகசுந்தரம், உ.ரா.ராஜேந்திரன், பா.சுந்தர், எஸ்.தாஸ், மா.வெங்கடேசன், டாக்டர் அன்புச்செழியன், டாக்டர் எஸ்.ஓவியக்கண்ணன், மல்லிகா ராமகிருஷ்ணன், எஸ்.டில்லி பாபு, இ.ஜாபர், ஏ.சரவணன், தி.ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். 1வது பகுதிச் செயலாளர் கே.திலகர் நன்றி கூறுகிறார்.



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜ6 பேசினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணிச் செயலாளர் அரசுக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## மதுரை, கோவை, திருச்சி என மாபெரும் நூலகங்களை அமைத்து வரும்

# நமது முயற்சிகளுக்கு நல்லூக்கமாக அமைந்தது!

## ஜெர்மனி – கொலோன் பல்கலை தமிழ்த் துறை நூலகத்தைப் பார்வையிட்டு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



பெர்லின், செப். 3 -

ஜெர்மனி நாட்டின் கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நூலகத்தைப் பார்வையிட்ட பின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**பழந்தமிழ் இலக்கியச் சுவடிகள், பல முதற்பதிப்புகள் என 40 ஆயிரம் அரிய தமிழ் நூல்களைக் கொண்ட கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நூலகத்தைப் பார்வையிட்டேன்.**

**ஐரோப்பாவில் தமிழியல் ஆய்வுகளுக்கான முக்கிய மையமான கொலோன் தமிழ்த்துறை மூடப்படுவதைத் தடுக்க, ஆட்சிக்கு வந்ததுமே 1.25 கோடி ரூபாயை வழங்கியது நமது திராவிட மாடல் அரசு! அது வீணாகவில்லை என்பதை இங்குள்ள** Dr. Sven Wortmann, Mr. Sharon Nathan, Mrs. Daria Lambrecht **ஆகியோரின் தமிழார்வத்தைக் கண்டபோது அறிந்து மகிழ்ந்தேன்.**

**சென்னை, மதுரையைத் தொடர்ந்து கோவை, திருச்சியிலும் மாபெரும் நூலகங்களை அனைவருக்குமான அறிவு மையங்களாக அமைத்து வரும் நமது முயற்சிகளுக்கு நல்லூக்கமாக இந்த** 'Cologne Library Visit' **அமைந்தது.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





திருவெறும்பூர் தொகுதியில் திருவெறும்பூர் பகுதி மக்களுக்காக அன்பில் அறக்கட்டளை மற்றும் அப்பல்லோ மருத்துவமனையுடன் இனைந்து நடைபெறும் மருத்துவ முகாமினை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், பகுதி கழகச் செயலாளர் சிவக்குமார், மாமன்ற உறுப்பினர் நீலமேகம், மருத்துவர்கள் சுரேஷ், தமிழரசன், வட்டக் கழகச் செயலாளர்கள் அப்பு கருணாநிதி, வி.பி. கர்ணாகரன், வினோத் கனகராஜ், செல்வராஜ், குணாநிதி, அருண்குமார், கயிலைநாதன், புண்ணிய மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலகுண்டு தெற்கு ஒன்றியம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



தாளவாடி கிழக்கு ஒன்றியம், ஈரோடு வடக்கு மாவட்டம்.



களக்காடு தெற்கு ஒன்றியம், திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



வெம்பாக்கம் மேற்கு ஒன்றியம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



திமிரி கிழக்கு ஒன்றியம், இராணிப்பேட்டை மாவட்டம்.